**தலைப்பு 007 – நீதிச் சேவை ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 007 – நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில்

தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 நவம்பர் 30 ஆண்டு திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் CIGAS வலை உள்ளீட்டு கட்டமைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இறுதி திறைசேரி அச்சீடுகள் நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் SA 12, SA 20, SA 40, SA 90 அச்சீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | SA 12 இல் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் SA xxx அறிக்கையில் விரிவாக இடம்பெற்றுள்ளதால் SA 12 நிதிநிலை அறிக்கையில் இணைக்கப்படவில்லை மேலும் SA 12 மற்றும் SA 90 இன் பிரதிகள் இணைப்புகள் 01, 02 இல் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | தொடர்புடைய சுற்றறிக்கையின்படி நிதிக்கூற்றுக்களுடன் திறைசேரி அச்சீடுகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 6 ஆம் பந்தியின் ஏசிஏ 5 மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்படும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான முற்பண கணக்குகள் தொடர்பான கூற்றின் (ஏசீஏ – 5) திறைசேரி அச்சீடு (SA52) இன் பிரகாரம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆண்டினுள் வரவுகள் மற்றும் பற்றுகள் (11 மற்றும் 12 இன் கீழ்) பெறுமதிகள் சரியாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏ.சி.ஏ. 05 முற்பணக் கணக்குகள் கூற்றில் மற்றும் எஸ்.ஏ. 52 திறைசேரி அச்சீட்டு அறிக்கையில் உள்ள குறிப்புகளின்படி, பற்று மற்றும் வரவுகளில் வேறுபாடுகள் இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், அத்தகைய வேறுபாடுகள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. | முற்பணக் கணக்குகள் கூற்றில் மீதிகள் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டு கைத்தவிர்க்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 21,700 பெறுமதி 20-03-01-00 எனும் வருமான தலைப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 20–06–02–02 (ஏனைய) எனும் வருமானக் குறியீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து ரூபா 21,700 தொகையானது 2003.01.00 இன் கீழ் கணக்கு காட்டப்பட வேண்டியதுடன், எதிர்காலத்தில் திருத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | வருமானம் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டினுள் கைத்தவிர்க்கப்பட்ட ரூபா 31,279 தொகையான தொடர்பாடல் உபகரணங்களை விற்பனை செய்தமையால் கிடைத்த வருமானமான ரூபா 1,000 பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் உரித்துகளை அகற்றும் நிதியேற்பாடு மற்றும் பௌதீக சொத்துக்களை விற்பனை ஆகியவற்றின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களிலிருந்து பெறப்பட்ட மொத்தத் தொகை 20.06.02.02 இன் கீழ் கணக்குப் வைக்கப்பட்டுள்ளதால், செயல்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 1,000 காட்டப்பட்டு இருந்ததுடன், அடுத்த ஆண்டு முதல் திருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் துல்லியமாக காண்பிக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 08 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்கள் ஆகியவற்றுக்கான நிதியேற்பாடு ரூபா 26,120,000 தொகையில் ரூபா 10,923,533 | வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் படி, கடுமையான செலவினக் கட்டுப்பாடு மற்றும் முறையான | போதுமான அளவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எஞ்சியிருந்ததுடன், அந்த சேமிப்புகள் 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. | முகாமைத்துவத்தின் மூலம், அரசின் பணம் அதிக வினைத்திறனுடன் நல்ல நிதிக் கட்டுப்பாட்டுடன் திறம்படவும் விவேகமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | 2023 ஜனவரி 27 ஆம் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02(இ)(ii) ஆம் பந்தியின் பிரகாரம் 1403 இற்காக செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 1403 செலவின விடயத்திற்காக ரூபா 1,000,000 அதாவது 48 சதவீதம் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரமான மாற்றங்களின் மூலம் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட போது இருந்த கட்டணத்தை விட அதிக சதவீதம் மின்சாரம் மற்றும் தண்ணீருக்கான கட்டணத்தை அதிகரித்தமையின் அடிப்படையில் விடய இலக்கம் 1403 இற்கான வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலின் பேரில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் உள்ள விதிகள் அடிப்படையில் நிதியேற்பாடு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | தொடர்புடைய சுற்றறிக்கை விதிகளின்படி செயற்பட வேண்டும். |

### 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிகூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ரூபா 407,682 தொகையான பொறுப்புக்கள் காணப்பட்ட போதிலும் திறைசேரியின் அச்சீட்டு SA 92 இல் பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொறுப்புகளின் மீதியான ரூபா 407,682 சரியாக உள்ளது, மேலும் திறைசேரியின் அச்சிடப்பட்ட SA 92 அறிக்கை திறைசேரியால் தற்போது தயாரிக்கப்படவில்லை என்பதால், இது குறித்து அரச கணக்குகள் திணைக்கத்திற்கு தெரிவிக்கப்பட்டதுடன், அது சரி செய்யப்பட்டு மீண்டும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சீடுகளில் பொறுப்புகள் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டுக்கு உரிய ரூபா 9,000 தொகையான பொறுப்புக்கள் பொறுப்புக்கள் பதிவேட்டில் மற்றும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பொறுப்புக்கள் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிராமையால் அந்த பெறுமதியால் பொறுப்புக்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தன. | திசெம்பர் மாதத்திற்குரிய மதிப்பீட்டு படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகள் தொடர்பில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக உறுதிச்சீட்டுகளை சமர்ப்பிக்க முடியாமை மற்றும் பொறுப்புகளை CIGAS மென்பொருளுக்கு உள்ளடக்குவதற்கு சனவரி 31 இற்கு முன்னர் நடவடிக்கை எடுக்க வேண்டியமையால், ரூபா 37,523 தொகை பொறுப்புகளாக உள்ளடக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின்படி, சரியான பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் மற்றும் பொறுப்புப் பதிவேட்டிலும் காட்டப்பட வேண்டும். |

**2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | ஆணைக்குழுவின் நிதி கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அலுவலகத்திற்குள் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள் கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஆண்டின் தொடக்கத்தில் எழுத்துப்பூர்வமாக, கணக்காய்வுப் பிரிவிற்கு ஒரு பிரதியுடன் அதிகாரத்தை வழங்குதல் இடம்பெறுவதுடன், அதன் செயல்திறன் ஆண்டு முழுவதும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாட்டு விடுமுறை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுத்தபோது, அந்த அதிகாரம் வேறு உத்தியோகதர்ருக்கு மாற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரங்களில் தயாரித்தல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்கு உரிய ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக செயல்பட வேண்டியத்துடன் அறிக்கையின் 3.2 (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள் காரணமாக அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வழக்குகள் குறித்த புள்ளிவிவரங்களை சேகரிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான செயல்திறன் அறிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டுக்கான செயல்திறன் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 இன் விதிகளைப் பின்பற்ற வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புகள் பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| 139 (4) | 722,594 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலுத்தப்படும் எந்த ஒரு பணத்திற்கும் | குடிநீர் கட்டணம், தொலைபேசி கட்டணம் போன்ற பயன்பாட்டுக் | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறையான பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 16 கொடுப்பனவு உறுதி சீட்டுக்கள் தொடர்பில் அவ்வாறு செயல்பட்டிருக்கவில்லை . | கட்டணங்கள் தொடர்பான பணம் செலுத்துவது தொடர்பான பட்டியல்கள் சம்பந்தப்பட்ட கோவையில் ஆவணப்படுத்தப்பட்டிரு ந்ததுடன், அவற்றை உறுதிச்சீட்டுகளுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 262 (2),(3) | 2,952,757 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலுத்தப்படும் அனைத்து கொடுப்பனவு உறுதி சீட்டுகளிலும் அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ‘‘செலுத்தப்பட்டது” எனும் முத்திரை இடப்பட்டு சிறு கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தொடர்பில் அதற்கமைய செயற்பாட்டிராத 28 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அனைத்து கட்டண உறுதிச்சீட்டுகளிலும், ”பணம் செலுத்தப்பட்டது” என முத்திரையில் சிறு கையொப்பம் இடப்பட்டு இருப்பதாகவும், பணம் செலுத்தியதை உறுதிப்படுத்தும் மற்ற ஆவணங்களில் ‘‘செலுத்தப்பட்டது” எனும் முத்திரை மட்டுமே வைக்கப்பட்டுள்ளது என்றும், அந்த ஆவணங்களில் சரியான சிறு கையொப்பத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 1645 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பில் நாளாந்த ஓட்ட குறிப்புகள் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பொறுப்பு கூற வேண்டிய ஏனைய உத்தியோகத்தர் ஒருவரால் நாளாந்தம் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் நாளாந்த ஓட்ட குறிப்புகளில் பின்வரும் குறைபாடுகள் நிலவின. | | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | • வாகனத்திற்கு உரிய நாளாந்த ஓட்ட குறிப்புகளில் எரிபொருள் சமப்படுத்தல் இடம்பெற்றிருக்க வேண்டிய போதிலும் சில சந்தர்ப்பங்களில் வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் கையொப்பமிட்டிருக்க வில்லை. | காரின் எரிபொருள் சமப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கையொப்பம் இல்லாத இடங்களில் கையொப்பம் இடப்பட்டுள்ளதாக வாகனப் பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார். | |
| | • 03 வாகனங்களுக்கு உரிய நாளாந்த ஓட்ட குறிப்புகளில் எரிபொருள் சமப்படுத்தப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரமற்ற முறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 03 வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்டக் குறிப்புகளில் எரிபொருள் சமப்படுத்தல் பல சந்தர்ப்பங்களில் அதிகாரம் இன்றி மாற்றப்பட்டதாக கூறப்பட்டாலும், அவை கணித பிழைகளை சரிசெய்வதற்காக செய்யப்பட்ட மாற்றங்கள் மாத்திரமே என குறிப்பிடப்பட்டிருந்தது. | |

| | | | |
|---|---|---|---|
| | • நாளாந்த ஓட்ட குறிப்புகளில் உரிய பயணத்தடைவை நிறைவடைந்த போது வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் 03 வாகனங்களுக்கு உரியதாக ஓட்ட தடவைகளின் இறுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சாரதியால் கையொப்பமிடப்பட்டு ள்ளதுடன் சில சந்தர்ப்பங்களில் வாகனங்களின் ஓட்டத் தடவையின் இறுதியில் பயன்படுத்திய உத்தியோகத்தர் கையொப்பமிட்டிருக்க வில்லை. | 03 மோட்டர் வாகனங்கள் தொடர்பான பயணத்தின் முடிவில், சாரதி சில சந்தர்ப்பங்களில் மட்டுமே கையொப்பமிட்டுள்ளார், மேலும் சாரதி கையொப்பமிட்ட அனைத்து சந்ர்ப்பங்களும் அத்தியாவசிய உத்தியோகபூர்வ பயணங்களாக உத்தரவாதம் அளிக்கப்படுவதுடன், மேலும் அந்த வாகனங்களின் பயணத்தின் முடிவில் பயன்படுத்தப்படும் உத்தியோகத்தர் கையொப்பமிடாத இடங்களில் இதுவரை கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) பொது நிர்வாக சுற்றறிக்கை 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் 03 ஆம் பந்தி | இரண்டு வாகனங்கள் தொடர்பாக, சுற்றறிக்கையின்படி மாதாந்த அறிக்கை தயாரிக்கப்படவில்லை. | செயலாளரும் சிரேஷ்ட உதவிச் செயலாளரும் பாரிய கடமைகளை சாட்டப்பட்டுள்ளமையா ல் வாகன நாளாந்த ஓட்டப் பதிவேடுகளை தினந்தோறும் பராமரிக்க முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2008 (i) ஆம் இலக்க சுற்றறிக்கை | குடிமக்கள்/நலனாளிகள் கட்டளைச்சட்டத்தை அறிமுகப்படுத்துவது ஒவ்வொரு அரச நிறுவனத்தாலும் செய்யப்பட வேண்டும் என்றாலும், குடிமக்கள்/நலானாளிகள் சாசனத்தை ஆணைக்குழு அறிமுகப்படுத்தவில்லை. | சம்பந்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் படி குடிமக்கள்/ நலனாளிகள் கட்டளைச்சட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | அரச நிதிச் சுற்றறிக்கை 2020 ஆகஸ்ட 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டில் மீண்டுவரும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதற்கு பிரதான கணக்கிட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினை பெற்று அதன் பிரதி ஒன்றை தேசிய பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அரச நிதி திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்ப வேண்டும். எனினும், ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் பிரதான கணக்கிட்டு | 2023 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டம் 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2023 அக்டோபர் 09 ஆம் திகதி அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதி திணைக்களம் ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2024 ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டம் உரிய திகதிக்கு முன்னர் அங்கீகரித்து அதன் பிரதிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரால் 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது டன் 2023 அக்டோபர் 10 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| • சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி திணைக்களத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டியின் 13 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள விரிவான பெறுகைகள் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. | வருடம் முழுவதற்கும் ஒரே தடவையில் விரிவான பெறுகைகள் திட்டம் ஒன்றினை தயாரித்தல் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதால் 2024 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பெறுகை நடவடிக்கையும் ஆரம்பிக்கும்போது பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு அதற்குரிய விரிவான பெறுகைகள் திட்டத்தினை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நடபாண்டின் மீண்டெழும் நிகழ்ச்சி திட்டங்களுக்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மூலதன நிகழ்ச்சி திட்டங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டுக்கான மூலதன மற்றும் மீண்டெழும் நிகழ்ச்சி திட்டங்கள் உள்ளடங்களாக பெறுகைகள் திட்டத்தினை தயாரித்துள்ளதாக தெரிவித்துக் கொள்ளுகிறேன். | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | | | |
| | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 (i) ஆம் பந்தி | நீதி அமைச்சினால் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் சுற்றறிக்கை விதிகளின்படி கையகப்படுத்தப்படவில்லை. | இவ்விரு வாகனங்களின் பதிவு உரிமையை ஆணைக்குழுவிற்கு மாற்ற வேண்டிய அவசியமில்லை எனவும், 2024 ஆம் ஆண்டு முதல் இரண்டு வாகனங்களின் பராமரிப்புப் பணிகள் மாத்திரமே இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் நீதி அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார். | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.6 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் ஏதேனும் ஒரு விசேடமான பணிக்காக வழங்கப்படும் உப கட்டுநிதி 10 நாட்களினுள் மீள தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 98,000 பெறுமதியான உப கட்டுநிதியை தீர்ப்பதில் 13 முதல் 14 நாட்கள் வரையான காலதாமதம் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் அனைத்து முற்பணங்களும் உரிய பணி நிறைவடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உப கட்டுநிதி கால தாமதமின்றி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 பந்தியின் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, பிரதான கணக்கிட்டு உத்தியோகத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டுக்குரிய செயல் நடவடிக்கை திட்டம் 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டுக்குரிய செயல் நடவடிக்கை திட்டம் 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது எனவும், அரச நிதிச்சுற்றறிக்கையின் இலக்கம் 02/2020 இன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்குரிய செயல் நடவடிக்கை திட்டம் உரிய திகதிகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டியின் இலக்கம் 12 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் துறை, பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர் மற்றும் வெளியீடு (Out put) தொடர்பான விபரங்கள் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காலச் சட்டகம் மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் | 2023 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாத பொறுப்புக்கள் துறை பொறுப்பு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி 2024 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதும் காலைச் சட்டகத்தினை சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் ஆண்டு முழுவதும் செயற்படுகின்றமையால் அதனை மாதாந்தம் காண்பித்தல் நடைமுறைக்கு சாத்தியமற்றது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் திட்டவட்டமான காலச் சட்டகம் ஒன்று இனம் காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2023 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 500,000 தொகை திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் உள்ளபடியான மூலதன செலவினம் ரூபா 201,810 ஆக காணப்பட்டது. அதற்கமைய பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் 60 சதவீதமான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், ஆணைக்குழுவினால் திட்டங்களை தயாரிக்கும் போது நடைமுறைக்கு சாத்தியமான நிலை கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்ய வேண்டிய 05 டெஸ்க்டாப் மானிட்டர் இயந்திரங்கள் ஆண்டின் இறுதியில் கொள்வனவு செய்யப்பட்டதுடன், திறைச்சேரியின் கட்டுப்பணம் கிடைக்காமையின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 125,000 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பணம் இந்தச் செலவினத்தினுள் உள்ளடங்காது. வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 02/2023 இன் பிரகாரம் செலவினங்களை குறைப்பதற்காக சேதமடைந்த Multifunctional Fax இயந்திரத்தினை பழுது பார்த்து பயன்படுத்திய காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகைகள் திட்டம் சரியானதாகவும் நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கைகளை குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, செயலாற்றல் அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய செயலாற்றல் அறிக்கை 2023 மார்ச் 26 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்மைய 2020 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கைக்காக 01 வருடம் 09 மாத காலதாமதம் மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான செயலாற்றல் அறிக்கைக்காக 08 மாத காலதாமதம் நிலவியது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையினாது இந்த அறிக்கையின் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அதற்காக 01 வருடம் 01 மாத காலதாமதம் ஒன்று நிலவியது. | முடியாதெனவும், 2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கைகளை குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க முடியாதெனவும், 2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, செயலாற்றல் அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 01/2020 ஆம் பந்தியின் 11.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 756(6) பந்திக்கமைய பொருள் மெய்மையாய்வு நிறைவு செய்யப்பட வேண்டிய கால சட்டகத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு சபையொன்று நியமித்தல் ஆண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டுக்கு உரிய பொருள் மெய்மையாய்வு சபை 2024 ஜனவரி 04 ஆம் திகதி வரையிலும் நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவின் பொருள் மெய்மையாய்வு நடாத்துவதற்கு 2023 நவம்பர் 29 ஆம் திகதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பொருள் மெய்மையாய்வு சபையின் மூன்றாவது அங்கத்தவரை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பொருள் மெய்மையாய்வு சபையை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காலச் சட்டகத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வுச் சபை நியமனம் செய்யப்பட வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 09 ஆம் திகதி மோட்டார் வாகனம் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் நிதிப்பிரமாணம் 103(1)(உ) இன் பிரகாரம் சேதங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் சேதம் அதில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | மோட்டார் வாகனத்திற்கு இரவு நேரத்தில் விலங்குகளின் மூலம் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், அதனை பழுது பார்ப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 66,150 தொகை காப்புறுதிக் கம்பனியால் ரூபா 63,209 தொகையும் வழங்கப்பட்டதுடன், சபையினால் எஞ்சிய ரூபா 2,941 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த நட்டத்துடன் அதற்கு முன்னர் நிலவிய சிறு கோளாறு தொடர்பிலும் அந்த | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பத்திலேயே பழுதுபார்த்தல் இடம்பெற்றமையால் அரசாங்கத்திற்கு ஏற்படவிருந்த பாரிய செலவினத்தை அதன் மூலம் குறைத்துக் கொள்ள கூடியதாக இருந்தத்துடன், அதற்காக நட்ட பதிவேட்டிலும் நட்டங்கள் மற்றும் கைத்தவிர்ப்புகள் தொடர்பான கூற்றிலும், புத்தகங்களிலிருந்தும் பதிவழித்தல் கூற்றிலும் பதிவு செய்யப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் | |

**3.5 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 506 (ட) இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கின் வருடாந்த இணக்க கூற்று நிதிப்பிரமாணம் 503(1) இன் கீழ் சீராக்கங்கள் அகற்றப்பட்ட பின்னர் உள்ளபடியான பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கக்கூற்றில் நிதிப்பிரமாணம் 503(1) இன் கீழ் சீராக்கங்கள் அகற்றப்பட்ட உள்ளபடியான பெறுமதிகள் தவறுதலாக காண்பிக்கப் பட்டிருந்ததுடன், எதிர்வரும் வருடம் முதல் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | இணக்கக்கூற்றில் நிதிப்பிரமாணம் 503(1) இன் கீழ் சீராக்கங்கள் அகற்றப்பட்ட பின்னரான உள்ளபடியான பெறுமதிகள் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 185,000 தொகையான கடன் மீதியை அறவீடு செய்தல் தொடர்பில் தாபனவிதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் | குறித்து உத்தியோகத்திற்கு தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கடன் மீதியை தீர்ப்பதற்கு 2024 ஜூன் 30 ஆம் வரையிலும் கால அவகாசம் கோரப்பட்டுள்ளதுடன் அந்த திகதியின் பின்னர் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | முற்பண ''பி'' கணக்கின் பின்னிணைப்பு 3.1 இல் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கீழ் ஒவ்வொரு உத்தியோகத்தரிடமிருந்தும் ரூபா 10,000 தொகையான விழா முற்பண மீதி கடன்பட்டோர் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் விழா முற்பட மீதியான ரூபா 10,000 தொகை கடன்பட்டோர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | கடன் மீதிகளை சரியாக கடன் பட்டோர் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய எம்எஸ்டீடபிள்யூ/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசிவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் 2022 ஆம் ஆண்டுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகள் இனங்கான பட்டிருந்த போதிலும் அந்த நிலைபெறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இணைப்பு செய்வதற்கு உத்தியோகத்தர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதத்தின்படி, ஆணைக்குழு 2022 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை அடையாளம் கண்டு, அந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பணிகளை ஒருங்கிணைக்க உத்தியோகர்களை நியமித்து, நிலையான அபிவிருத்தி வேலைத்திட்டத்தை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பந்தி இலக்கம் 40(1) இன் பிரகாரம் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு அந்த ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் நியமிக்கப்படும் தமது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. 2019 ஜனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வோ சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கமைய தான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று அனைத்து விசேட செலவின அலகுகளுக்காகவும் தாபிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கான உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை நிறுவுவதற்கு பதவியணிக்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும், ஆணைக்குழுவின் பணிகள் தற்போதுள்ள பதவியணிக்கே போதுமானதாக இல்லாத காரணத்தால் தற்காலிக கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகின்றதுடன், இந்த கணக்காய்வு அலகிற்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கு போதிய இடவசதி இல்லாததால், உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. | தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளின்படி உள் கணக்காய்வு பிரிவை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஆணைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 117 ஆன போதிலும், திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான சிரேஷ்ட மட்டத்திலான 09 பதவிகள் முன்றாம் நிலை மட்டத்திலான 02 பதவிகள் இரண்டாம் நிலை மட்டத்திலான 29 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலை மட்டத்திலான 14 பதவிகளின் வெற்றிடமாக காணப்பட்டது. | ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் 08 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் கடமைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், ஆணைக்குழவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையை விட அதிகமான அதிகாரிகளால் வெற்றிடங்களின் கடமைகள் ஈடுசெய்யப்பட்டுள்ளன எனவும், குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணியில் உள்ள போதிலும் முறையான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தின் காரணமாக, அனைத்து கடமைகளும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், அரச நிதி அதிகபட்ச செயல்திறனுடன் நல்ல நிதி கட்டுப்பாட்டுடன் திறமையாகவும் விவேகமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவு ம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத 03 நீதிமன்ற பதிவாளர் பதவிகள் SL 1 சம்பள படிநிலையிலும், பதவியொன்று MN - 6 சம்பள படிநிலையிலும் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத நீதிமன்றப் பதிவாளர் பதவிக்கு 03 உத்தியோகத்தர்கள் காணப்படுவதுடன், அவர்களில் ஒரு உத்தியோகத்தர் நீதிமன்றப் | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கு ஏற்ப பணியிடங்கள் உருவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தாபிக்கப்பட்டிருந்தது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 01 நீதிமன்ற சுருக்க எழுத்தாளர் (Court Stenographer) பதவி MN 2 சம்பள படிநிலையிலும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு மேலதிகமாக உள்ளபடியான பதவியணியில் 01 சுருக்க எழுத்தாளர் (Court Stenographer) பதவி MN 7 சம்பள படிநிலையில் வைக்கப்பட்டிருந்தது. | பதிவாளர் தரம் I ஐச் சேர்ந்தவர் மற்றும் மற்ற இரண்டு அதிகாரிகள் நீதிமன்றப் பதிவாளர் தரம் II - I ஐச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களின் சம்பளத் திட்டம் SL - 1 ஆகும். அந்த பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், நம்பகமான முறையில் பணியாற்றத் தகுந்த அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர் கிடைக்கும் வரை, MN-7 சம்பளத் திட்டத்தில் உள்ள உத்தியோகத்தர் (அரச சேவைக்கான புதிய ஆட்சேர்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால்) மூலம் அந்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 01 ஆம் ஆம் பந்தியின் பிரகாரம் ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடல் 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதுவரையிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் | ஒரு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், நீதிமன்ற பதிவாளர் சேவையின் மற்றும் பட்டியலுக்கு உட்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் அனைத்து பதவிகளிலும் உள்ள உத்தியோகத்தர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு நீதிமன்றங்களின் செயல்திறன் மற்றும் செயல்திறனை அதிகரிக்க வழிவகுக்கும் மிகவும் நடைமுறை செயல்திறன் மதிப்பீட்டு முறையை முன்மொழிவதை நோக்கமாகக் கொண்டு | தொடர்புடைய சுற்றறிக்கையின் படி மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டு செயலாற்றல் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஒன்று ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பாய்வு செய்து அறிக்கையிட ஒரு குழு நியமிக்கப்பட்டு அதன் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், அது தொடர்பான பரிந்துரைகள் நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |